T.P

Pandi's Copy
S. Theagarajan

# BULLETIN OF THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS - 5.

## VOLUME 22

அரசினர் கீழ்த்திசைச் சுவடி
நூலகப் பருவ இதழ்


General Editor:

**Natana. Kasinathan**

*Director*
*Dept. of Archaeology*
*Madras - 113.*



©

*GOVERNMENT OF TAMILNADU*



*1995.*

**Price Rs.105/-**

# BULLETIN OF THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS - 5.

## VOLUME 22

அரசினர் கீழ்த்திசைச் சுவடி
நூலகப் பருவ இதழ்

**General Editor:**

**Natana. Kasinathan**

*Director*
*Dept. of Archaeology*
*Madras - 113.*

©

*GOVERNMENT OF TAMILNADU*
*1995.*

**Price Rs.105/-**

Published under the Authority of the
Government of Tamil Nadu

©

GOVERNMENT OF TAMIL NADU

Subscription : Rs.105/-

*Printed at* : Central Cooperative Press, Madras - 2.

# TABLE OF CONTENTS


| | | Page No. |
|---|---|---|
| 1. | General Editor's Note | i |
| 2. | Pazhanthamizhar Kanakkarivu (Tamil) | 1 - 10 |
| 3. | Nadodippadalgal (Tamil) | 11 - 19 |
| 4. | Prasasthilekhana Prakaraha (Sanskrit) | 20 - 28 |
| 5. | Choladesa Vrthandam (Telugu) | 29 - 42 |
| 6. | Rag Mala (Persian) | 43 |

# General Editor's Note

Bulletin of the Government Oriental Manuscripts Library, Madras-5 is one among a few of this kind in this country wherein are published the rare works from manuscripts and not the views and conjectures of editors.

This present XXII Volume brings to light innumerable hidden truths unknown so far.

For example, in the first Tamil article subtle Mathematical knowledge of our ancient Tamils has been divulged. This work is definitly a milestone in the history of the scientific knowledge the Tamils. This has been edited by Dr. S. Soundarapandian, Curator, G.O.M.L.

Second piece namely the Nadodipadalgal is an exposure of the Tamil Culture where we find their bare feelings and emotions.

The third work Prasasti Lekhana Prakarah meticulously describes various modes of writing salutations, when addressing to kings, saints and others.

The fourth Telugu work Choladesa Vrthandam furnishes us the history of Cholamandalam taking into account the local traditions which we cannot eschew while writing history of any soil.

The last persian musical work Ragmala, talks about the grammar of Hindustani music.

The outcome of this bulletin is undoubtedly the fruit of the unflinching labour of Dr. S. Soundarapandian, Curator, G.O.M.L.

1

# பழந்தமிழர் கணக்கறிவு

**டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்**

அ.கீ.சு நூலகத்தில் ஆர். 497 என்ற எண்ணில் பாதுகாக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடியிலிருந்து இங்கு, பழங்கணக்குகள் பதிப்பிக்கப் பெற்றுள. அவ்வோலைச் சுவடியில் மொத்தம் 21 ஓலைகள் உள. தலைப்பு எதுவும் இல்லை; ஆசிரியர் பெயரும் இல்லை; காலம் கி.பி.19ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலம். பொதுவாகப் பழந்தமிழர்தம் கணக்குகள் இந்தத் தலைமுறையினர் அறியாதவை. அவற்றை அறிவது தேவையானது; புது வாழ்வமைக்க வழிகோலுவது.

ஆஸ்தான கோலகலம் என்றொரு கணக்குநூல் இந்த நூலகத்தால் முன்பு வெளியிடப்பட்டுள்ளது. அதில் இல்லாத கணக்குகளே இங்கு பதிப்பிக்கப் பெற்றுள. இவை தவிர, கணக்கதிகாரம் என்ற தலைப்பில் கீழ்க்காணும் எண்களில் சில ஓலைச் சுவடிகள் அ.கீ.சு. நூலகத்தில் உள; டி.2199, டி.2368, ஆர்.199(சி), ஆர்.238, ஆர்.436, ஆர்.551 ஆர்.1998-9, ஆர்.6174, ஆர்.6176, ஆர்.7102, ஆர்.7123.

## பழந்தமிழர் கணக்கறிவு

### கணக்கு 1 :-

ஒரு பட்டணம், அந்தப் பட்டணத்துக்குக் கோட்டை முதல் வாசல் -1-; 2ங் கோட்டைக்கி 2 வாசல் ; 3ங் கோட்டைக்கி 3 வாசல்; 4ங் கோட்டைக்கி 4 வாசல்; 5ங் கோட்டைக்கி 5 வாசல்; 6ங் கோட்டைக்கி 6 வாசல்; 7ங் கோட்டைக்கி 7 வாசல்; 8ங் கோட்டைக்கி 8 வாசல்; 9ங் கோட்டைக்கி 9 வாசல்; 10ங் கோட்டைக்கி 10 வாசல்

இந்த கோட்டையினுள்ளே சிறிது குதிரை வந்து நுளைந்து.

முதல் கோட்டைக்குள்ளே போறபோது ஒரு பங்காய்ப் போச்சுது. ரெண்டாங் கோட்டையில் போறபோது ரெண்டு பங்காய்ப் போச்சுது; மூன்றாங் கோட்டையில் போறபோது மூன்று பங்காய்ப் போச்சுது; நாலாங் கோட்டையில் போறபோது நாலு பங்காய்ப் போச்சுது; அஞ்சாங் கோட்டையில் போறபோது அஞ்சு பங்காய்ப் போச்சுது; ஆறாங் கோட்டையில் போறபோது ஆறு பங்காய்ப் போச்சுது; ஏழாங் கோட்டையில் ஏழு பங்காய்ப் போச்சுது; எட்டாங் கோட்டையில் போறபோது எட்டு பங்காய்ப் போச்சுது; ஒன்பதாங் கோட்டையில் போறபோது 9 பங்காய்ப்

போச்சுது; பத்தாங் கோட்டையில் போறபோது பத்து பங்காய்ப் போச்சுது.

இதில், வந்த குதிரை எவ்வளவென்று சொல்லவும்.

**- குருவே துணை - ராமா -**

**விடை :-**

முதல் கோட்டை வாசலுக்குக் குதிரை 2520

2ங் கோட்டை வாசலுக்குக் குதிரை 1260

3ங் கோட்டை வாசலுக்குக் குதிரை 840

4ங் கோட்டை வாசலுக்குக் குதிரை 505

6ங் கோட்டை வாசலுக்குக் குதிரை 420

7ங் கோட்டைக்கி குதிரை 370

8ங் கோட்டை வாசலுக்குக் குதிரை 315

9ங் கோட்டை வாசலுக்குக் குதிரை 270

10ங் கோட்டை வாசலுக்குக் குதிரை 250

**- ஸ்ரீராமச்சந்திர பகவான் - ராமசுவாமி -**

**கணக்கு 2 :-**

அறுபத்தினாலு பாகம் அகலம், ஐநூறு பாகம் ஆழம் ஒரு கிணறு.

அறுபத்தினாலு பாக அகலத்தையும் முழப் படுத்துகிறதுக்கு விபரம்

**விடை :-**

பாகம் 1க்கு 4 முழமாக அறுபத்தினாலு பாகத்துக்கு முழம் 256; ஆழம் 500 பாகத்துக்கு முழம் 2000 கண்டுது.

ஒரு முழ உசரம், ஒரு முழ அகலத்தில் நின்ற தண்ணீர் 13 1.2 மரக்கால் கண்டுது.

இப்படி, 256 முழ நீளத்துக்குப் பெருக்க, 3456 மரக்கால் கண்டுது.

3456 மரக்காலையும் 256 முழத்துக்கும் பெருக்க, எட்டு' லெட்சத்தியெண்பத்தினாலாயிரத்தி எழுநூற்றி முப்பத்தாறு (8,84,736) மரக்கால் கண்டுது.

இப்படி, 100 முழ உசரத்துக்கும் பெருக்க, 8க் கோடியே 84 நூறாயிரத்தி 73000த்தி 600 (8,84,73,600) மரக்கால் கண்டுது.

ஆ.க. ரெண்டு முழத்துக்கும் பெருக்க, 176 கோடியே 94 நூறாயிரத்தி 72 ஆயிரம் (176,94,72,000) மரக்கால் கிணற்றில் நின்ற தண்ணீர் இறைபட, தண்ணீர் மூன்று லெட்ச மரக்கால் இறைபட்டுது. கிணற்றில் தங்குறையாய் நின்ற தண்ணீர் 176 கோடியே 91 நூறாயிரத்தி 72 ஆயிரம் மரக்கால் மேரைக்கிப் பெருக்கிச் சொல்லவும்.

## கணக்கு 3 :-

7000 கோடி பேருக்கு ஒரு காசு

## விடை :-

ஈரரை கொண்டது ஒரு காசு; நாலு கால் கொண்டது ஒரு காசு; எட்டு அரைக்கால் கொண்டது ஒரு காசு; பதினாலு மாகாணி கொண்டது ஒரு காசு; இருபது மாக் கொண்டது ஒரு காசு; முன்னூறிருபது முந்திரி கொண்டது ஒரு காசு; முந்திரி 1க்குக் கீழ் முந்திரி 320; மூணாங் கீழ் முந்திரி ஈய்ந்து கொடுத்துச் சொல்லவும்.

(. . .) 3 கோடியே 27 நூறாயிரத்தி 68 ஆயிரம் மூணாங்கீழ் முந்திரி கொண்டது ஒரு காசு; மூணாங்கீழ் முந்திரி ஒன்றுக்கு இம்மி 10 ½; 34 கோடியே 40 நூறாயிரத்தி 64 ஆயிரம் இம்மி கொண்டது ஒரு காசு; இம்மி 1க்கு நுட்பம் 3 ½ ; 120 கோடியே 42 நூறாயிரத்தி 24 ஆயிரம் நுட்பம் கொண்டது ஒரு காசு; நுட்பம் 1க்கு அதிநுட்பம் 7 ½ ; 93 கோடியே 16 நூறாயிரத்தி 80 ஆயிரம் அதிநுட்பம் கொண்டது ஒரு காசு; அதி நுட்பம் 1க்குத் திட்பம் 15; 13 ஆயிரத்தி 547 கோடியே 52 நூறாயிரம் திட்பம் கொண்டது ஒரு காசு; திட்பம் 1க்கு அதினுட்பம் 22 ½ ; 3 நூறாயிரத்தி 4 ஆயிரத்தி 7 நூற்றுப் பத்துக் கோடியே 20 நூறாயிரம் கொண்டது ஒரு காசு; அதிட்பம் 1க்கு அற்பம் 4 ½ ; 13 நூறாயிரத்தி 71 ஆயிரத்தி 463 கோடியே 400 ஆயிரம் கொண்டது ஒரு காசு; அற்பம் 1க்கு அதற்பம் 45; 6 மகா கோடியே 17 நூறாயிரத்தி 14 ஆயிரத்தி 9 நூத்தி 53 கோடி கொண்டது ஒரு காசு; அதற்பம் 1க்கு சாரம் 11; 67 மகாகோடியே 88 நூறாயிரத்தி 64 ஆயிரத்தி நானூற்றி 83 கோடி கொண்டது ஒரு காசு; தீர்ந்த வயணம், ஒருத்தன் பேருக்குச் சாரம் 96 ஆயிரத்தி 9 நூத்தி 80 ½ (முக்கால்) (கால்) (முந்திரி) இந்தப்படி மேரைக்கித் தீந்து சொல்லவும்.

## கணக்கு 4 :-

ஒரு ராசா பட்டணத்துக்குப் பத்துக் கோட்டை

முதல் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 2ங் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 3ங்

கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 4ங் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 5ங் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 6ங் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 7ங் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 8ங் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 9ங் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன். 10ங் கோட்டைக்கி ஒரு தலை வாசல்; அதுக்கொரு காவல்காரன்.

ஒரு நாள் தினத்திலே அந்த ராசா வீட்டிலே பத்துப்பேர் களவு செயிதான்; சிறிது மாணிக்கம் கொண்டுவந்தார்கள். அவர்களை, முதல் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான்.

அப்போது, அவர்கள் கொண்டு வந்த மாணிக்கத்தில் பத்துப் பங்கு வச்சு, ஒரு பங்கு அவனுக்குக் குடுத்துப்போட்டு, குறை ஒன்பது பங்கும் கொண்டு போனான்.

2ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவன் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பங்குவச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு குறை ஒன்பது பங்கையும் கொண்டு போனான்.

3ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவனுக்கும் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பத்துப் பங்கா வச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு குறை ஒன்பது பங்கையும் கொண்டு போனான்.

4ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவனுக்கும் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பத்துப் பங்கு வச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு ஒன்பது பங்கு கொண்டு போனான்.

5ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவனுக்கும் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பத்துப் பங்கு வச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு குறை ஒன்பது பங்கு கொண்டு போனான்.

6ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவனுக்கும் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பத்துப் பங்கு வச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு குறை ஒன்பது பங்கு கொண்டு போனான்.

7ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவனுக்கும் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பத்துப் பங்கு வச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு குறை ஒன்பது பங்கு கொண்டு போனான்.

8ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவனுக்கும் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பத்துப் பங்கு வச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு குறை ஒன்பது பங்கு கொண்டு போனான்.

9ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவனுக்கும் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பத்துப் பங்கு வச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு குறை ஒன்பது பங்கு கொண்டு போனான்.

10ங் கோட்டை வாசல்காரன் கண்டுபிடிச்சான். அவனுக்கும் கொண்டுவந்த ஒன்பது பங்கையும் பத்துப் பங்கு வச்சு, ஒரு பங்கு குடுத்துப்போட்டு குறை ஒன்பது பங்கு கொண்டு போனான்.

இந்த ஒன்பது பங்கையும் பத்துப் பேருக்குக் குடுத்து, ஏத்த வித்தியாசமில்லாமல் மாணிக்கம் சரியாயிருந்தது.

முன் களவு கொண்டுவந்த மாணிக்கம் யெத்தனையென்று சொல்லுகிறதற்கு விபரம்:-

**விடை :-**

முன் களவு கொண்டுவந்த மாணிக்கம், பதினாயிரங் கோடி மாணிக்கம் இந்த பதினாயிரங் கோடி மாணிக்கத்தையும் பங்கு வைக்க விபரம்:-

முதல் கோட்டைக்காரனுக்கு கொண்டுவந்த மாணிக்கத்தைப் பத்துப் பங்கு வைத்து, ஒரு பங்கு, 1000 கோடி மாணிக்கம் குடுத்தான்.

2ங் கோட்டைக்காரனுக்கு 900 கோடி மாணிக்கம்.

3ங் கோட்டைக்காரனுக்கு 810 கோடி மாணிக்கம்.

4ங் கோட்டைக்காரனுக்கு 729 கோடி மாணிக்கம்.

5ங் கோட்டைக்காரனுக்கு 659 கோடியே 10 நூறாயிரம் மாணிக்கம்.

6ங் கோட்டைக்காரனுக்கு 590 கோடியே 49 நூறாயிரம் மாணிக்கம்.

7ங் கோட்டைக்காரனுக்கு 530 கோடியே 44 நூறாயிரத்திப் பத்தாயிரம் மாணிக்கம்.

8ங் கோட்டைக்காரனுக்கு 478 கோடியே 29 நூறாயிரத்தி 69 ஆயிரம் மாணிக்கம்.

9ங் கோட்டைக்காரனுக்கு (..)30 கோடியே (..6) நூறாயிரத்தி 72 ஆயிரத்தி 100 மாணிக்கம்.

10ங் கோட்டைக்காரனுக்கு 387 கோடியே 42 நூறாயிரத்தி 4 ஆயிரத்தி 9 நூத்தி 80 மாணிக்கம் கொடுத்தான்

மிச்சம் 3086 கோடியே நூறாயிரத்தி 44 ஆயிரத்தி 720 மாணிக்கத்தையும் பத்துப் பேருக்குப் பங்கு வைக்க, ஒருத்தன் பேருக்கு

மாணிக்கம் 308 கோடியே 77 நூறாயிரத்தி 24 ஆயிரத்தி 472 மாணிக்கமென்று சொல்லவும்.

**கணக்கு 5 :-**

சதிரங்கம் 64 வீட்டுக்கும் நெல் ரெட்டிக்கிற துகைக்கி விபரம்:-

**விடை :-**

| | |
|---|---|
| 1 வீட்டுக்கு நெல் | 1 |
| 2 வீட்டுக்கு நெல் | 2 |
| 3 வீட்டுக்கு நெல் | 4 |
| 4 வீட்டுக்கு நெல் | 8 |
| 5 வீட்டுக்கு நெல் | 16 |
| 6 வீட்டுக்கு நெல் | 32 |
| 7 வீட்டுக்கு நெல் | 64 |
| 8 வீட்டுக்கு நெல் | (128) |
| 9 வீட்டுக்கு நெல் | 256 |
| 10 வீட்டுக்கு நெல் | 512 |
| 11 வீட்டுக்கு நெல் | 1024 |
| 12 வீட்டுக்கு நெல் | 2048 |
| 13 வீட்டுக்கு நெல் | 4096 |
| 14 வீட்டுக்கு நெல் | 8192 |
| 15 வீட்டுக்கு நெல் | 16384 |
| 16 வீட்டுக்கு நெல் | (3)2768 |
| 17 வீட்டுக்கு நெல் | 6(4)536 |
| 18 வீட்டுக்கு நெல் | 1(2)8072 |
| 19 வீட்டுக்கு நெல் | 2 நூறாயிரத்தி 62 ஆயிரத்தி 144 |
| 20 வீட்டுக்கு நெல் | 5 நூறாயிரத்தி 24 ஆயிரத்தி 288 |
| 21 வீட்டுக்கு நெல் | 10 நூறாயிரத்தி 48 ஆயிரத்தி 576 |
| 22 வீட்டுக்கு | 20 நூறாயிரத்தி 97 ஆயிரத்தி 152 |
| 23 வீட்டுக்கு | 41 நூறாயிரத்தி 94 ஆயிரத்தி 304 |

| | |
|---|---|
| 24 வீட்டுக்கு | 83 நூறாயிரத்தி 88 ஆயிரத்தி 608 |
| 25 வீட்டுக்கு | கோடியே 67 நூறாயிரத்தி 77 ஆயிரத்தி 216 |
| 26 வீட்டுக்கு | 3 கோடி 35 நூறாயிரத்தி 54 ஆயிரத்தி 432 |
| 27 வீட்டுக்கு | 6 கோடி 71 நூறாயிரத்தி 8 ஆயிரத்தி 864 |
| 28 வீட்டுக்கு | 13 கோடி 42 நூறாயிரத்தி 17 ஆயிரத்தி 728 |
| 29 வீட்டுக்கு | 26 கோடி 84 நூறாயிரத்தி 35 ஆயிரத்தி 456 |
| 30 வீட்டுக்கு | 53 கோடி 68 நூறாயிரத்தி 70 ஆயிரத்தி 9 நூத்தி 12 |
| 31 வீட்டுக்கு | 107 கோடி 37 நூறாயிரத்தி 41 ஆயிரத்தி 824 |
| 32 வீட்டுக்கு | 214 கோடி 74 நூறாயிரத்தி 83 ஆயிரத்தி 628 |
| 33 வீட்டுக்கு | 429 கோடி 49 நூறாயிரத்தி 67 ஆயிரத்தி 296 |
| 34 வீட்டுக்கு | 858 கோடி 99 நூறாயிரத்தி 34 ஆயிரத்தி (5)92 |
| 35 வீட்டுக்கு | 171(7) கோடி 98 நூறாயிரத்தி 69 ஆயிரத்தி (1)84 |
| 36 வீட்டுக்கு | 3435 கோடி 9(7) நூறாயிரத்தி 38 ஆயிரத்தி 3(6)8 |
| 37 வீட்டுக்கு | 6871 கோடி 94 நூறாயிரத்தி 76 ஆயிரத்தி 736 |
| 38 வீட்டுக்கு | 13 ஆயிரத்தி 7 நூத்தி 43 கோடி 89 நூறாயிரத்தி 53 ஆயிரத்தி 472 |
| 39 வீட்டுக்கு | 27 ஆயிரத்தி 487 நூத்தி கோடி 79 நூறாயிரத்தி 6 ஆயிரத்தி 9 நூத்தி 44 |
| 40 வீட்டுக்கு | 54 ஆயிரத்தி 9 நூத்தி 75 கோடியே 58 நூறாயிரத்தி 13 ஆயிரத்தி 808 |
| 41 வீட்டுக்கு | (1) நூறாயிரத்தி 9 ஆயிரத்தி 9 நூத்தி 51 கோடி 16 நூறாயிரத்தி 27 ஆயிரத்தி 776 |
| 42 வீட்டுக்கு | 2 நூறாயிரத்தி 19 ஆயிரத்தி 92 கோடி 32 3 நூறாயிரத்தி 55 ஆயிரத்தி 52 |
| 43 வீட்டுக்கு | 4 நூறாயிரத்தி 39 ஆயிரத்தி 68 நூத்தி 4 கோடி 65 நூறாயிரத்தி 11 ஆயிரத்தி (1)04 |
| 44 வீட்டுக்கு | 8 நூறாயிரத்தி 79 ஆயிரத்தி 69 கோடி 32 நூறாயிரத்தி 22 ஆயிரத்தி 208 |

| | |
|---|---|
| 45 வீட்டுக்கு | 17 நூறாயிரத்தி 59 ஆயிரத்தி 218 கோடி<br>60 நூறாயிரத்தி 44 ஆயிரத்தி 416 |
| 46 வீட்டுக்கு | 35 நூறாயிரத்தி 18 ஆயிரத்தி 437 கோடி<br>20 நூறாயிரத்தி 88 ஆயிரத்தி 832 |
| 47 வீட்டுக்கு | 70 நூறாயிரத்தி 36 ஆயிரத்தி 8 நூத்தி<br>(7)4 கோடியே 41 நூறாயிரத்தி 77 ஆயிரத்தி 64 |
| 48 வீட்டுக்கு | மகா கோடியே 40 நூறாயிரத்தி 73 ஆயிரத்தி<br>7 நூத்தி 18 கோடி 83 நூறாயிரத்தி 55 ஆயிரத்தி<br>328 |
| 49 வீட்டுக்கு | 2 மகா கோடியே 81 நூறாயிரம் 46 ஆயிரம்<br>497 கோடி 67 நூறாயிரத்தி 10 ஆயிரத்தி 656 |
| 50 வீட்டுக்கு | 5 மகா கோடியே 62 நூறாயிரம் 14 ஆயிரத்தி<br>9 நூத்தி 15 கோடியே 34 நூறாயிரத்தி<br>21 ஆயிரத்தி 312 |
| 51 வீட்டுக்கு | 13 மகா கோடியே 25 நூறாயிரத்தி 94 ஆயிரத்தி<br>9 நூத்தி 95 கோடியே 34 நூறாயிரத்தி<br>21 ஆயிரத்தி 312 |
| 52 வீட்டுக்கு | 22 மகா கோடியே 51 நூறாயிரத்தி 79 ஆயிரத்தி<br>9 நூத்தி 81 கோடி 36 நூறாயிரத்தி 85 ஆயிரத்தி<br>2 நூத்தி 48 |
| 53 வீட்டுக்கு | 45 மகா கோடியே 3 நூறாயிரத்தி 59 ஆயிரத்தி<br>9 நூத்தி 82 கோடியே 67 நூறாயிரத்தி<br>80 ஆயிரத்தி 4 நூத்தி 90 |
| 54 வீட்டுக்கு | 90 மகா கோடியே 7 நூறாயிரத்தி 19 ஆயிரத்தி<br>9 நூத்தி 25 கோடியே 47 நூறாயிரத்தி<br>40 ஆயிரத்தி 9 நூத்தி 92 |
| 55 வீட்டுக்கு | 108 மகா கோடியே 14 நூறாயிரத்தி 39 ஆயிரத்தி<br>8 நூத்தி 50 கோடியே 94 நூறாயிரத்தி<br>81 ஆயிரத்தி 9 நூத்தி 84 |
| 56 வீட்டுக்கு | 360 மகா கோடியே 28 நூறாயிரத்தி<br>79 ஆயிரத்தி 7 நூத்தி 1 கோடியே<br>89 நூறாயிரத்தி 63 ஆயிரத்தி 9 நூத்தி (68) |

| | |
|---|---|
| 57 வீட்டுக்கு | 720 மகா கோடியே.... 51 ஆயிரத்தி 4 நூத்தி 3 கோடியே 79 நூறாயிரத்தி 27 ஆயிரத்தி .... |
| 58 வீட்டுக்கு | 1441 மகா கோடியே 15 நூறாயிரத்தி 18 ஆயிரத்தி 807 கோடியே 58 நூறாயிரத்தி 55 ஆயிரத்தி 872 |
| 59 வீட்டுக்கு | 2882 மகா கோடியே 30 நூறாயிரத்தி 37 ஆயிரத்தி 615 கோடியே 17 நூறாயிரத்தி 11 ஆயிரத்தி 74(4) |
| 60 வீட்டுக்கு | 5764 மகா கோடியே 60 நூறாயிரத்தி 75 ஆயிரத்தி 2 நூத்தி 30 கோடியே 34 நூறாயிரத்தி 23 ஆயிரத்தி 4 நூத்தி 8 |
| 61 வீட்டுக்கு | 11529 மகா கோடியே 21 நூறாயிரத்தி 50 ஆயிரத்தி 460 கோடியே .... 9 நூத்தி 76 |
| 62 வீட்டுக்கு | 23 ஆயிரத்தி 58 மகா கோடியே 43 நூறாயிரத்தி 921 கோடியே 36 நூறாயிரத்தி 93 ஆயிரத்தி 9 நூத்தி 52 |
| 63 வீட்டுக்கு | 47 ஆயிரத்தி 16 மகா கோடியே 86 நூறாயிரத்தி 1842 கோடியே 73 நூறாயிரத்தி 87 ஆயிரத்தி 9 நூத்தி 4 |
| 64 வீட்டுக்கு | 94 ஆயிரத்தி 33 மகா கோடியே 72 நூறாயிரத்தி 3 ஆயிரத்தி 685 கோடியே· 47 நூறாயிரத்தி 75 ஆயிரத்தி 8 நூத்தி 8 |

**கணக்கு 6 :-**

ஒரு காசுக்குச் சிறிது பாக்கு நினைக்க, நினைத்ததை ஒன்று நாலாய் வெட்ட, வெட்டினதைக் குழிக்கு ஒன்றாகப் போட்டு, குழிக்குப் பத்தாகப் பரிக்க, பரித்ததை முன் நினைத்த காசுக்கு நினைத்த பாக்கு விலைக்கு விற்க, வித்த பணம் அறியும்படி

**விடை :-**

ஒரு காசுக்கு பாக்கு 4: இதனை ஒன்று நாலாக வெட்டி -16- இதனைக் குழிக்கு ஒன்றாகப் போட்டு, குழிக்குப் பத்தாகப் பரிக்க -160- இதனைக் காசுக்கு 4 பாக்காக விற்க - 40 காசு என்பது: இதுக்குத் தானம் முன் தறிச்ச பாக்கும் பின் பரிச்ச பாக்குக்குப் பணம்.

**கணக்கு 7 :-**

ஒரு (ராசாவின்) கோட்டைக்கி நாலு வாசலுண்டு. அதிலே, மறு பட்டணத்து ராசா வந்து, வடக்கு வாசலிலே சண்டை தொடுத்தான். அப்போது, மறு ..... வாசலிலே இருக்கிறே சேவுகரிலே, அந்த வடக்கு வாசலில் அத்தனை பேர் போனார்கள். அப்போது ..., வாசலிலே உயித்தம் பண்ண முடியாமல், கிழக்கு வாசலிலே வந்தான். அங்கையும் அந்த வாசலிலே இருக்கிற பேர் எத்தனை? மூன்று வாசலிலேயும் இருந்து வந்தார்கள்; அங்கேயும் ஆகாமல் போச்சுது. அந்தப்படி நாலு வாசலி லேயும் உயித்தம் பண்ணி ஆகாமல், புறப்பட்டுப் போனான்.

ஆனபடியினாலே அந்தந்த வாசலிலே இருந்த சேவுகர் எத்தனை பேர்? முதல் வடக்கு வாசலிலே இருந்த சேவுகர் எத்தனை பேர்? அனுப்பின சேவுகர் எத்தனை பேர்? நாலு வாசலுக்கும் நிரந்தரம் சரியாக நின்ற சேவுகர் எத்தனை பேர்? என்றால் சொல்லுகிறதற்கு விபரம்:-

**விடை :-**

முதல் வடக்கு வாசலுக்கு இருந்த ராணுவம் 125. கிழக்கு வாசலுக்குச் சனம் 925. (நிரந்தரம்) 256 சேவுகரென்று சொல்லுவது.

**கணக்கு 8 :-**

ஒரு பட்டணத்திலே மூன்று விக்கினேசுவர மகா கோவிலுண்டு. அந்தக் கோவிலுக்கு ஒரு (ந)ம்பியான் உண்டு; ஒரு நந்தவனம் உண்டு. அந்த நம்பியார், அந்த நந்தவனத்திலே பூவெடுத்துக் கொண்டுபோய், செலத்திலே நனைத்தால், ஏட்டிக்கி ரெட்டியாகும்; அதிலே சிறிது பூவை விக்னேசுவரனுக்குச் சாத்தி (மிஞ்சிய) பூவை, திரும்பக் கொண்டுபோய்ச் செலத்திலே நனைத்தால் ஒட்டி ரெட்டியாகும்; அதிலே சிறிது பூவை (விக்னேசுவரனுக்குச்) சாத்திப்போட்டு, மீதப் பூவைத் திரும்பக் கொண்டுபோய்ச் செலத்திலே நனைத்தால் ஒட்டிக்கிரட்டியாச்சுது.

அதிலே, முன் ரெண்டு விநாயகனுக்குச் சாத்தின பிரகாரம் சாத்த, சரியாக இருந்தது.

ஆனபடியினாலே, நந்தவனத்திலே எடுத்த பூ எத்தனை? சாத்தின பூ எத்தனை?

**விடை :-**

நந்தவனத்திலே எடுத்த பூ 7; சாத்தின பூ 8 என்று சொல்வது.

# நாடோடிப் பாடல்கள்

**எஸ். தியாகராஜன்**

இங்கு அச்சிடப்பட்டுள்ள நூல், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் ஆர்.3401 என்ற எண்ணின் கீழ் உள்ள ஓலைச் சுவடியிலும் ஆர்.7488 என்ற எண்ணில்தாள் சுவடியிலும் உள்ளது. இயற்றிய புலவரின் பெயர் குறிக்கப் பெறவில்லை.

நாடோடிப் பாடல்கள் நாட்டுப் புறத்தாரின் வாழ்வியலை ஆராய வகை செய்கின்றது. பாமர மக்களின் நினைவில் வாழ்ந்து மரபாக, வாய் மொழியாக எடுத்துரைக்கப் பட்டு வருவது. தொல்காப்பியர் காலத்திலிருந்து பாரதி காலம் வரை பல புலவர்கள் இவ்வகை இலக்கியத்தை, பாட்டை, சுவைத்துள்ளனர். வாய்மொழி இலக்கியம் தமிழில் 100 ஆண்டுகளாக அச்சுருவம் பெற்றுவருகின்றது.

நாட்டுப்புறம் என்பது கிராமமும் கிராமியம் சார்ந்த இடங்களாகும். இவ்விடங்களில் பாடப்பட்டு வரும் பாடல்கள், நாடோடிப் பாடல்கள் என்றும் பெயர்பெறும். நாடோடிப் பாடல்கள் வாயில் பிறந்து, செவிகளில் உலவி, காற்றில் மிதந்து, கருத்தில் இனிப்பவை. பெரும்பாலும் காலமும், ஆசிரியரும் இல்லாத் தன்மையது.

"தெரிந்த மொழியால் செவ்விதின் கிளப்பது" - என்று தொல்காப்பியர் கூறுவதை நாடோடிப் பாடலுக்கு இலக்கணமாகக் கூறலாம்.

1.a. கொள்ளிடத்தைக் கண்டோம் குறைகளெல்லாம்
தீர்த்துவிட்டோம்
உள்ளமதி லானந்தம் உட்கொண்டோம் - வள்ளலே
தில்லாலே பாட்டை சீராகப் பாடுதற்கு
வல்ல பைமணாளா வா.

தில்லாலே லேலோ தன்னனே யேசிகிமிக்கி
தில்லாலே லேலோ.

2.a. ஆனை முகற்கிளைய அறுமுகனே ஐயாவுனைச் சரணம்
ஆண்டவனே சரண மென்றேன் - தில்லேலோ (க)
நானும் நடந்திருப்பேன் நடப்பாரைப் பார்த்திருப்பேன் -சாமி
நடையைப்போல் செய்கையிலே நான் காணேன்.
தன்னானே தானே தன்ன (2)

காடைக்கூடு கக்கத்திலே கருத்தச்சாமி பக்கத்திலே
மாடப்புறாச் சோடிக் கமையுண்டோ வுன்னிடத்தில்

நன்னானே நானே (3)

கோட்டுருமால் கட்டியல்லோ ரோட்டுவழி போறச்சாமி - உன்
கோட்டுருமால் பொல்லாது ரோட்டைவிட்டுக் கீழிறங்கு (4)

ஒருத்திக் கொருமகன்டி உன்னை நம்பி வந்தவன்டி

2.b. பொறுமை பொறுத்தவன்டி போகவர யேசாதே (5)
மூணு சிலிப்பாக்காரா முறுக்கிவிட்ட மீசைக்காரா
தாழம்பூ வேட்டிக்காரா தங்கிப்போனா லாகாதோடா (6)

கண்டியிலே பெண்டாட்டி கடலிலே வைப்பாட்டி
தூத்துக்குடிச் சந்தையிலே துட்டுக்கொரு பெண்டாட்டி (7)

வேட்டி வெளுத்துக்கட்டி வெள்ளைருமால் சுங்குவிட்டு
கூட்டமாய்ப் போகையிலே கூப்பிடுவேன் யாரைவிட்டு? (8)

உன்பல்லுப் பணம் பெறுமோ பல்வரிசை பொன்பெறுமோ
சொல்லுப் பணம் பெறுமோ சோதிதிரு வாய்திறந்து (9)

3.a. ஆடிருக்க மாடிருக்க அத்தைமகள் கிட்டிருக்க
எருமைத் தயிரிருக்க ஏண்டாபோனாய் கெண்டிசீமை (10)

குத்துக்கல்லு மேலிருந்து கொழுந்துவெற்றிலை
தின்கையிலே - அடி
கைலேஞ்சி கண்டுநான் கண்டு மகிழ்ந்தேனடி (யக)

நாலுமுத்தம் வாசலிலே நானும் படுக்கையிலே
பார்த்துப்போற சாமிக்கு பாவம்வந்து சேருமையா (யஉ)

கள்ளுக் கடையைப்பாரு காசுபோற போக்கைப்பாரு
சின்னக் கடையைப்பாரு சிறுக்கிபோற நடையைப்பாரு (யங)

3.b. வேப்பம்பூ பூக்காதையா விடிய மலராதையா
நேத்துவந்த சரக்கு நேரந் தெரியாதே (யச)

பாலைப் பழமோடி பழம்பரிக்குஞ் செண்பகமே
நீலக் கருங்குயிலே நிக்கட்டுமா போகட்டுமா (யரு)

அந்திநேர மாச்சுது அழகுள்ள என்சாமி
சந்திலேயும் பொந்திலேயும் சாடைசொல்லிக் கூப்பிடாதே (16)

4.a. பொன்னாலே ராட்டினம் போகுதாம் புகைவண்டி
தன்னாலே யோடுதடி சாதியுடைய வெள்ளைக்காரன் (17)

கள்ளுக் குடியாதிங்கே காரியந்தான் பேசாதிங்கே
மெத்தக் குடியாதிங்கே பித்தம் சிரசிலேறும் (18)

பட்டுமேலே பட்டுடுத்தி பட்டணத்தே போகையிலே
பட்டணத்தில் பெய்தமழை பொட்டுருவப் பேயலியே (19)

பட்டணத்தி லேஞ்சுபோட்டு பாதைவ்ழி போகையிலே
பார்த்து நடக்காமல் பாவம்வந்து நேர்ந்ததையா (20)

4.b. வேல மரத்தடியே வெள்ளைக்காரன் கூடாரம்
வேதம் படிக்கச்சொல்லி வெள்ளைக்காரன் சொல்லுரானே (21)

பருத்திப் படலானேன் பக்கமெல்லாம் பிஞ்சானேன்
நான் வெறுத்தேன் மனுவானேன் உலகமெல்லாம் பேரெடுக்க
(22)

பொட்டுமேலே பொட்டுவைத்து பொட்டலுக்குப் போகையிலே
பொட்டலிலே பேஞ்சமழை பொட்டுருவ பேயலையே (23)

பாதி வெற்றிலை கொடுத்த மச்சான் பங்குனிமாதம்
தொடுத்த மச்சான்
வாட வெற்றிலை கொடுத்தமச்சான் வாடாபயலே கூத்து -
பார்க்க (24)

5.a. கும்பகோணம் மாயவரம் குடிகெடுக்குந் தஞ்சாவூர்
தஞ்சாவூர் தட்டுவாணி தாயை மறக்கடித்தாள் (25)

காப்புசீலை காரியவள் கங்காணி மகளுமல்ல
அன்ன கோப்புக்கரியவள் உனக்கன்ன நடைவேண்டி (26)

வட்டவட்டப் பாறையிலே வலிய நெல்லு குத்தயிலே
ஆர்கொடுத்த சாயசீலை ஆலவட்டம் போடுதடி (27)

ஆருங் கொடுக்கவில்லை அவுசாரி போகவில்லை
கையெரியப் பாடுபட்டு கட்டினண்டா சாயசீலை (28)

5.b. பருத்தியிளம் பருத்தி பாங்கான வேலிகட்டி
சிறுக்கிஇளஞ் சிறுக்கி சூலான மாயமென்ன (29)

ஆத்துக்கு அக்கரையி லத்தைமக னொருவனுண்டு
அவன்வாய் திறந்துபாடு கையில்வாடைபட்டு சூலானேன் (30)

கும்பகோண ரயில்வண்டி கோசாரசேரி டக்குவண்டி
வடக்கு வண்டி மீதிருந்து பக்குவமாய் பாடாயோ (31)

சாரோட்டு வண்டிகாரா சலங்கைபோட்ட மாட்டுக்காரா
மாட்டை யடியாதடா நானும் வாரேன் கூண்டுக்குள்ளே (32)

6a. கல்லடியாம் வில்வமரம் கமுதடியாம் பூந்தோட்டம்
புல்லறுக்கப் போரபெண்ணே பூமுடிந்தா லாகாதா? (33)

அடே மதுரையிலே போகவேணும் மல்லிகைபூ வாங்கவேணும்
கொண்டையிலே முடிக்கவேணும் குலுக்கி நடக்கவேணும் (34)

ஆற்றிலே ஊற்றைப்பார் அவள்போர டீக்கைப் பாரு
காப்பணத்துக் கோப்பைப்பாரு கழுதைபோர ஜோக்கைப் பாரு
(35)

சின்னச்சின்ன வண்டிகட்டி சிவப்புக்காளை ரெண்டு கட்டி
மாடு நடக்கயில்லை மாட்டப்பா சாட்டையாலே (36)

6.b. ஆற்றிலே ரெண்டுமுட்டை அழகான கோழிமுட்டை
கோழிமுட்டை சோம்பினாலும் குடங்களிரண்டும்
சோம்பிலையே (37)

தெற்கத்தி வண்டிக்காரா திருவல்லி அண்ணமாரே
என் புருஷன் வண்டிக்காரன் எதிரே வரக்கண்டீரோ (38)

சாயசரிகை சேலை சாத்தனூர் வெள்ளைசேலை
ஆர் போட்ட சாயசேலை ஆலவட்டம் போடுதடி (39)

எல்லாரும் வண்டியிலே ஏலம்வரும் சுக்குவரும்
என்புருஷன் வண்டியிலே புதுக்கோட்டை வெல்லம் வரும் (40)

7.a. ஆற்றிலே ரெண்டுபிள்ளை அழகான தென்னம்பிள்ளை
தென்னம்பிள்ளை சோம்பினாலும் கிண்ணம்ரெண்டும்
சோம்பாதே (41)

மூணு மிளகரைத்து முக்குறுணி சாரு காய்ச்சி
சார்ஹூற்றும் சண்டாளியின் சாயச்சேலையைப் பாரீர் (42)

வெள்ளை வெள்ளை சீலைக்காரி வெள்ளரிக்காய் கடைக்காரி
கோனூறு வெள்ளரிக்காய் கொண்டுவாடி தின்றுபார்ப்போம் (43)

கம்புகுத்தி சோறாக்கி கடலைபொரி பொரித்து
வட்டிலிலே போடயிலே வந்ததுபார் தூக்குமரம் (44)

7.b. தூக்குமரம் மென்னசெய்யும் சூட்சுமக்கயிறு என்ன செய்யும்
மாடுதின்னும் புலையன் மாயமாய் தூக்குறானே (45)

சாலையிலே நெல்லிமரம் சர்க்காரு வைத்தமரம்
ஓங்கி வளர்ந்தமரம் உனக்கேற்ற தூக்குமரம் (46)

மதுரையிலே குதிரைவாங்கி மல்லிகைப்பூ சீனிகட்டி
அடித்தாராம் பொன்னுசாமி ஆற்றங்கரை மணலெழும்ப (47)

சட்டைமேலே சட்டைப்போட்டு சரிகைச்சட்டை மேல்போட்டு
போராராம் பொன்னுசாமி போலூரு கச்சேரிக்கு (48)

8.a. பத்தியுட னெஞ்சகமே பாரகத்தி லுள்ளோர்க்கு
தித்திக்க யானெடுத்து செப்பும் - முத்து

வீராய் சிந்தை விளம்புதற்கு காரனை
நேராக நிற்க நிலை.

ஆண்பிள்ளை யாகப்பிறந்த தெல்லாம் - சுகம்
அனுபவிக்க வென்று அறியாயோடி
காண்பவ ரென்னைப் பழித்திகழாமற்
கலந்தணை வாய் முத்துவீராயீ (க)

8.b. வீதியிலே விளையாடையிலே - ஒரு
ஓட்டைக் கரண்டி கண்டெடுத்தேன்
கண்ணை சிமிட்டியே வாங்கிக் கொண்டாளவள்
கட்டழகி முத்து வீராயி (உ)

ஊரான் ஊரான் தோட்டத்திலே பிள்ளாய்
ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்
காசுக்கு இரண்டுவிற்கச் சொல்லியவன்
காகிதம் போட்டாண்டி வெள்ளைக்காரன் (ங)

9.a. ஒரு வருஷமாய் ஒன்னரை மாதமாய்
எண்ணெயுந் தேய்த்து முழுகாமல்
சடை வளர்ந்ததும் சந்நியாசி யானதும்
சம்மதமோ முத்து வீராயி (ச)

முல்லை யரும்போடி நீயெனக்குச் - சின்ன
மூக்குத்தி நத்தடி நானுணக்கு
முல்லை யரும்புக்கும் மூக்குத்தி நத்துக்கும்
மோச முண்டோ முத்து வீராயி. (ரு)

நேரம்மா குமென்று விசாரம் வேண்டாம் - நிமிஷம்
நேரத்தில் வந்துன்னைக் கூட்டிக் கொண்டு
தூரமான மதுரைப் பட்டணம் போகத்தான்
துணையாய் வாரேன் முத்து வீராயி (சா)

9.b. என்னடியக்கா துரைமகன் கோட்டை
பளிச்பளிச் சென்று மின்னுதடி
என்றைக்குக் கோட்டை யிடிப்பாரோ - நான்
என்றைக்கு மஞ்சள் குளிப்பேனா (எ)

தேங்காயுருள தினையுருள இந்தத்
தேங்காய்த் தண்ணீரிலை மோத
மாங்காய்க் காசு யுருளுதடி இந்த
மகராசன் தொண்டைமான் சீமையிலே (அ)

குற்றாலம் போன கொண்டைக்காரி - சற்றே
மத்தாளம் வாங்கி நீவாராயோ
சித்தந் தெளியவே கும்ப கோணத்தில்
சேதி யறிந்திட பாராயோ (கு)

10.a. தென்னை மரத்துப் பாளைக்குள்ளே ரெண்டு
தேரை யிருந்து முழிக்குது பார்
தென்றல டிக்குது என்னை மயக்குது
தேன் மொழியே முத்து வீராயி (ய)

பாக்கு மரத்துப் பாளைக்குள்ளே ரெண்டு
பட்சி யிருந்து தவிக்குது பார்
பட்சி பறக்குது பறக்குது வேர்க்குது
பைங்கிளியே முத்து வீராயி (யக)

தென்னை மரத்திலே பாளைக்கட்டி - நல்ல
தெய்வ லோகத்திலே கள்ளிறக்கி
கள்ளுக் குடிக்கப் போன விடந்தனில்
தன்னை மறந்ததைப் பாருங்கடி

10.b. வயிற் பசிக்குது கஞ்சியில்லை - தெரு
வாசற் கிணற்றிலே தண்ணீ ரில்லை
அறுத்த விரலிலே ரத்தமில்லை - இந்த
அறிவு கெட்ட தோழிக்கு வெட்கமில்லை (யங)

கூந்தல் பெருத்தது கும்பகோணம் - பிள்ளாய்
கொண்டை பெருத்தது புதுக்கோட்டை
வாரி முடித்தது அம்மாபேட்டை - அவள்
அஞ்சி நடந்தது தஞ்சாவூர் (யச)

என்னடி யக்கா தெற்கத்தி யாவுனக்
கென்னேரம் பார்த்தாலும் தொள்ளைக் காது
தெற்குச் சீமையிலே தக்கைப் போட்டவள்
தேடி வளர்த்தாளே வீராயி (யரு)

11.a. குங்கு மந்தன்னைச் சுமந்த மங்கைதன்
குணத்தைக் கண்டுக் கொள்ளவுந் தகுமோ
எங்குஞ் சீமிக்கி யிம்மைக்கு நற்பலன்
ஏற்காதடி முத்து வீராயி (யசா)

பெண்கள் பூத்தேடி வைக்கவேணும் வைத்தால்
பிறரறி யாமலிருக்க வேணும்
கொண்டை மேற்பூத் தோண வைத்தால்
வேசியென்று கூறுவாரே முத்து வீராயி (17)

தன்னடி பார்த்து நடப்பதே யாவர்க்கும்
சற்குண மென்று சாற்று வார்கள்
அன்ன நடையொடு முன்னும் பின்னும்
அழகல்ல வேமுத்து வீராயி (18)

11.b. நன்மொழி சர்க்கரைக் கஞ்சி வார்த்து - சில
நாட்போன பின்பு விட்டோ டாமலே
அன்புடன் அல்லும்பகலு முன்னை வைத்து
ஆதரிப்பேன் முத்து வீராயி (19)

நம்பின வனைக் கைவிடாதே 'யெப்போதும்
நான் சொன்ன சொல்லை மறவாதே
நம்பவைத் துன்னை நட்டாற்றில் வைப்போர் சொல்
நயக்காதே முத்து வீராயி (20)

12.a. மதுரைப் பட்டணம் வீதியிலே நல்ல
மணவாளனும் நானுமாய்ப் போகையிலே
குறித்த கோபுர வாசலுந் தெற்கே
கருங் கூந்தலைக் கண்டேன் வீராயி (21)

வாடாதப் பூவே மருக்கொழுந்தே வுந்தன்
வாசலிலே வரக் காணே னடி
தேடாத நாளிலே தேன் சேர்த்தேன்
தேன் மொழியே முத்து வீராயி (22)

டப்பு நாற்காலி போட்டுக் கொண்டு - உன்னால்
நல்லெண்ணெய் தேய்த்து முழுகாமல்
ஜடை வளர்ந்ததும் சந்நியாசி யானதும்
சம்மதமோ முத்து வீராயி (23)

13.a. ஊருக்கு மேற்காலே வட்டப்பாறை
வட்டப் பாறைக்கடியில் செந்தலை வீரியன்
செந்தலை வீரியனுக் கடியில் செந்தேள்
செந்தேள் கடியில் ஒன்றைக் காக்காய்
கொத்தக் கொத்த கோத்தேரத்
திங்கத்திங்க தீந்துதாம் கந்தசாமி பாதத்தில்.

# प्रशस्तिलेखनप्रकारः

## प्रस्तावना

शुभोदन्तोऽयं मुद्रणार्थं विद्यमानेषु विरलेषु ग्रन्थेष्वन्यतमोऽयं चकास्ति प्रशस्तिलेखनप्रकारः इति । प्रपूर्वक शंसु-स्तुतौ धातोरूत्पन्नस्यास्य प्रशंसनं उपश्लोकनं इति पर्यायपदानि । ग्रन्थेऽस्सिन् गुरोरारभ्य महाराजपर्यन्तं मातृ. पितृ. भ्रातृ, ग्रामाधिकारि, सुहृत् आचार्यादीनां सर्वेषां प्रशंसनपूर्वकं कथं लेखनं कर्तव्यं, तदात्वे तेषां युक्तगुणप्रदर्शनं, स्वस्य तेषां च परस्परं विद्यमान संबन्धः, श्रीःइति-कतिदातव्यं इत्येवमादि सर्वं विशदं विद्यते । किंच, येषां प्रति प्रशस्तिपत्रं लिख्यते ते स्वेन पूजनीयाः अथवा स्वस्य अधिकारी उत स्वेन संरक्षणीयः आहोस्वित् शिक्षणीयो वा इत्यादिकं सर्वं पत्रमुखे विद्यमान परगुणप्रकटन पुरस्सरं श्रीशब्दसंख्यया सह उट्टङ्कितं दृश्यते।

इदमतीव महत्वपूर्णं यत् परेण सह पत्रव्यवहारसमये कथं व्यवहर्तव्यमित्यादि सौशील्यप्रकाशकोऽयं ग्रन्थः विराजते ।

किंच, एवंरूपं पत्रप्रशंसनव्यवहारं कस्मिन् काले आसीत्? कै : एवं लेखनसमये व्यवहृतं इत्यादिकं प्रश्नास्पदं विद्यते, असिन् काले एवं व्यवहारः कुत्रापि न दृश्यते। परं, इदं भाति यत् प्राय : अस्माकं भारतदेशराजशासनं यदाऽभूत् तदा राजकार्यव्यवहाराय अनुष्ठितं स्यादिति। अथ च, प्रायः

लुप्तपराजसु इदानीमेवंरूपव्यवहारोऽपि लुप्त इति निश्चिनुमः। यथा वा भवतु तदानीन्तनकालीनसामान्यजनव्यवहारज्ञानाय उपयुज्यत एव।

ग्रन्थस्यास्य कःकर्ता, कस्मिन् वर्षे कृतं इत्यादिकं प्रश्नास्पदमेव । अस्माकं ग्रन्थालये आर १७५२८ इति मातृकासंख्या दत्ता विद्यते। मातृकायां यावद्विद्यते तावल्लिखितम्। अत्र दृश्यमान दोषाननाकलयय गुणो गृहणन् कृतार्थयन्तु सन्तः इति प्रार्थये।

इत्थम्

**एस् शेषाद्रिः**

# प्रशस्तिलेखनप्रकार :

## ओं श्रीगणेशाय नम :

### अथ प्रशस्ती लिख्यते

१ गुरूं प्रति : स्वस्ति श्रीमद्धरिचरणवद्वन्दनीय कीर्तनीय चरणास्मत्कल्याणचिन्तनैकादिकारणेषु श्री (६) मदगुरूपूज्यचरणसरोजयुगलेषु ।

२ अज्ञातनृपाणां लेखयम्-स्वस्ति श्रीमन्निज भुजयुगलसन्दलित सकलरिपुवृन्द सुन्दरीनयननीलोत्पलगलद्वहल बाष्पपूर प्लवमानप्रतापशजहंसलीलालावण्य विशदीकृत दिग्विजयजनित यशोधारावलीषु श्रीमन्महाराजाधिराजश्री (५) अमुकदेवेषु सदा समरविजयीषु

३ नृपपत्नीप्रशंसा - स्वस्ति श्रीमदनवरतस्वस्वामिचरण कमलाश्रयणातिनिर्मलहृदयकमलसुचिन्तितनिजमडलान्तर्गत प्रजाकदम्बकल्याणासु श्रीमन्महाराजाधिराजराजीषु श्री (५) अमुक देवीषु ।

४ राजकुमारीयोग्य - : स्वस्ति श्रीमदगुरूदेवतापदाम्बुज प्रसादोपस्थितसंपत्तिकल्पलतिकाफलपुष्पवितरणानु रंजिताश्रितानुचरानुचरीबृन्दानुसेवितदिव्यालङ्करणालंकृत निर्मलमूर्तिषु श्रीमन्महाराजाधिराजकुमारी श्री (५) अमुकदेवीषु।

(५) भोगपत्नीयोग्य - स्वस्ति श्रीमद्रुक्मिणीस्नेहावतार रतिनायकसमस्तलीलालावण्यकलासामग्रीसन्तोषित भूनायककृपाकटाक्षावलीकृतभाग्यसंपत्तिषु श्रीमन्महाराजाधिरोपभोगिनीषु श्री (३) अमुकीषु ,

(६) पितृष्वसा-भगिनी-भ्रातृपत्नीयोग्य - स्वस्तिश्रीमत्सहराजानुराजानुरंजितानुरागिबन्धुजनगीयमानसौशील्यादि सदगुणयशश्चन्द्रमरीचिदीपितोभयकुलकुमुदासु श्री (३) अमुकदेवीषु ।

(७) ज्येष्ठ - कनिष्ठ पितृव्य - भ्राता-च-योग्यं - स्वस्ति श्रीमत्स्वसन्तति कृतापराधसहन केशवदाससंमातु शमितशमन कमनीय कर्मकौतुकेषु श्री (३) अमुकेषु

(८) जामाता भागिनेयं प्रति - : स्वस्ति श्रीमलमलगुणगणालंकृतामलमति सयति समर्चित स्वकुलार्चितदेवकृ ........ त मनोरम्येषु ।

(९) मित्रं प्रति-: स्वस्ति श्री मदसाधारणमानसावनीजनितसुकुमार परमप्रीतिलतिकानवरतरमृराजलाभिषेकीकरणसमुपचित ..... शाखापकुसुमफलानन्दरसमंजनानन्दमन्थरतरदीव्यतनूषु श्री (३) अमुकेषु इह हृदग्ताभिप्रायप्रेमकथयित्रीयं पत्रदूती।

(१०) पिता योग्यं-: स्वस्ति श्री मन्निजचरणसरोजयुगलनिरन्तरानुरागास्मदादिजनलाभस्थलभाग्योदयसंभावपरायणान्तःकरणवृत्तिषु श्री (६) मत्पितृ चरणकसलेषु (६) इतः अमुकस्य साष्टाङ्गसेवाशतपूर्वकवृत्तान्तनिवेदकं पत्रम ।

(११) मातृचरणकमलेषु - स्वस्ति श्रीमदभगवत्पदाङ्गुष्ठविषयीभूत स्रककृतार्थप्रादुर्भूतालङ्कृतगौरीपतिजडामण्डल कलुषनिवारण पवित्रितजगन्मण्डलसुरलोकप्रापितसंगरकुल भागीरथीवत्पवित्रतम स्मरणीयकीर्तनीय पदपदमसु श्री (६) मातृचरणेषु (गुरूपत्नी श्वशुरपत्नीच)

(१२) श्वशुरयोग्य-: स्वस्ति श्रीमद्रमापतिगौरीपतिकमलासगुण गौरवास्मदेकशरणेषु श्री (६) मत् श्वशुरचरणेषु

(१३) पुत्रं प्रति -: स्वस्ति श्रीमत्पितृपितामहादिमान्यजनसमु शिक्षितसदाचाराचरण मनन संकीर्तननियोजितसकल मतिवृत्तौ पितृमातृभक्ते श्री अमुकपुत्रे

(१४) भर्त्ता योग्य -: स्वस्ति श्रीमत्कोमलमलिन्यामिव कमल मित्रेषु सुकुमारकुमुदिन्यामिव, सुधा किरणेषु; स्नेह रत्नशरणे समुद्रेष्विव भुवचरणैकशरणायामप्येकदुःखा न्धकारनिराकरणेभास्करेष्विव साररसग्रहणे मधुपेष्विव श्रृङ्गाररसावगाहने ................ रतिपतिष्विव भवच्चरणैकशरणायामप्येकवल्लभेषु श्री (६) स्वामिचरणकमलेषु (६) तत्रामुकदेव्या त्रीणि प्रणामपूर्वकं हृदगताभिप्रायप्रकाशनीयं पत्रदूती ॥

(१५) प्रभुणा स्त्रीप्रति-: स्वस्ति श्रीमदतिसुकुमारकचरण मलिनीकृत कमलसौकुमार्याधरीकृतपूर्णचन्द्रमण्डलाधरीकृत चकोरीनयननयन मीनयुगलाधरीकृत भ्रमरीनिकर कचरीनिकराधरीकृत हेमकलशकुचकलशाधरीकृत

सुवर्णसृतिता सुवर्णतनूलतिका धनुप्रभ रतिरमण सामग्रीसभीष्टमददेवताकमखपुण्याधरीकृताप्सरोनिकेत निजतिकेतनायां मत्पाणिगृहीतायां श्री अमुकायां इतःश्री अमुकस्य सभाग्यवर्द्धनासि राशिप्रापयि पत्रीयं पत्रचरी॥

(१६) पण्डितानां योग्यं-: स्वस्तिश्री सदगुरूचरणसन्तत धुश्रूषणातिनिर्मलमनीषाकुशलताविर्भूतसरस्वतीप्रसादानन्दित अतिगहनशास्त्रार राप वि.....हन पंचानन वरिष्ठास्मद्विषयी भूत सदाशीर्वचनदानवरिष्ठेषु श्री (३) अमुकपण्डितेषु ।

(१७) पुरोहित योग्यं-: स्वस्ति श्रीमत्पुरूषार्थचतुष्टयप्राक सारभूतकर्मकाण्डपयोमथनसंप्राप्तसत्कर्मयुक्त फलमालालंकृत मूर्तिषुअमुकपुरोहितेषु ।

(१८) सामान्यब्राहणयोग्यम-: स्वस्ति श्रीमद्वेदस्मृति पुराणोदित निजवर्णधर्मावलीसवनसमापितकालसेनानीषु श्री (३) अमुकशर्मसु

(१९) अमात्यादीनि योग्यम-: स्वस्ति श्रीमदात्मकाश्ययीश्वरालंघ्य प्रतिज्ञापालन स्वाधिकृतिकरण धीबल मनोबल शरीरबल तेजोबलार्थबल शस्त्रास्त्रबल स्ववंशबलस्थिरीकृत स्वामिकृपाकटाक्षबलेषु श्री अमुकेषु ।

(२०) दूतादि वकीर्ति योग्यं-: स्वस्ति श्रीमत्स्वक्ष्मानायक सेनानि सचिवातर्वेशिकवस्व ध्यक्षलेयकादि भारभृन्मनोगत सदस च्चरित्रप्रापत्पुपा किंकरीकृतेन्द्रियनिकरपाटव सर्वज्ञीकृत निज क्ष्मानायकेषु श्री अमुकदूतवर्येषु

(२१) योगीश्वर दण्डी परमहंसयोग्यं-: स्वस्ति श्रीमत्परम पुरूषोपलब्धिभावनाङ्गभूतासन प्राणयाम प्रत्याहार ध्यान धारणादि सदयोगिजनकर्ममलिनीकृत शमन पराक्रमेषु श्री (३) योगीश्वरचरणेषु ॥

(२२) ज्ञानी ब्रह्मचारी वैरागी योग्य -: स्वस्ति श्री मत् प्रावृट्ब्रह्माभ्यसनदूरीकृतविषमतरविषयवासनोत्तर कालागमिष्यान्तरातिशयानन्द सुखेषु श्री (३) अमुकब्रह्म चारिकेषु।

(२३) सन्यासि योग्य-: स्वस्ति श्रीमत्सदाशिवपराराधनपरायण जन संगीतज्ञपति कालखंडकृतानेककार्यकारण संकरव्यापार व्यूहेषु श्री (३) अमुकसन्यासिजनवरिष्ठेषु ।

(२४) साधुमहाजनयोग्य-: स्वस्ति श्रीमत्सर्वसामन्तसेवा निर्वाहकेश कृषीवल गजवाजिपरिवर्द्धहेतुसेतुरक्षणनिपुणतरेषु श्री अमुक सेटवरेषु

(२५) पतिव्रतास्त्रीजनयोग्य-: स्वस्ति श्रीमत्स्वस्वामिचरण स्मरण पूजन कीर्तनादि सद्धर्म व्यवसायगम्यमान शुभरतनी भूभवाण्याः श्री अमुकदेव्याः यथा योग्यं पत्रम् ।

(२६) विधवा स्त्री योग्य-: स्वस्ति श्री मन्नारायणस्वरूपसत्वोक गतस्वपुरूष भरण सन्ततध्यानसमुपार्जित वैकुंठसौभाग्यलो .......या श्री अमुकदेव्या - इत : - श्रीअमुकस्य यथायोग्यप्रापिकेयं पत्रचरी ।

(२७) सर्वगुणयुक्तनृपाणां योग्यं-: स्वस्ति श्रीमद्ध्वस्तमहीरूह नृत्यत्कलशेरखड्गधाराव...न्तारिमुण्डमालार्पण सन्तुष्ट भैरवरव प्रसादोपचितानेकसंपत्तिवितरणविनोदितसत्कविजन देवगणगणवन्दीवर्गदीनवर्ग कामिनीवर्ग गीयमान सदयशोवर्ग श्रवणानन्द सागरावगाहन परमरसिकेषु श्री (६) सर्वगुणविशिष्टेषु महाराजाधिराजेषु ॥

(२८) क्षत्रिय रूरूकन योग्यं - स्वस्ति श्री मन्त्रिशिसखड्गैकशरणा द्विजकुल गोकुलभरणाततायिमौलिहरणादि क्षत्रियोत्तम धर्मालङ्करणेषु श्री अमुकेषु ।

(२९) दानशूरजनानां योग्यं - स्वस्ति श्रीमद्विद्वज्जनसंसर्ग पवित्रतमप्रपंचितमेदिनीसुरभिः कनकरिहरिदुकूल सदन्ताभयाविरत दानसंजात पुण्यसोपान देदीप्यमानसुरलोक सुपथिषु श्री (३) महादानरसिकेषु ॥

(३०) उत्तरदेशकाशकादिनयोग्यम्-: स्वस्ति श्रीमत्परमहंसा चारविस्तारविशेषतरात्माचारचरितिपरितोषित बुद्धषि प्रसादोपस्थित धर्म..का..समूहेषु

(३१) ग्रामाधीशप्रजाप्रधानयोग्य - : स्वस्ति श्रीमत्सर्वोपमो ------------------- सकलगुणगरिष्ठस्वहितकर्माचरण व्यसनदूरीकृतानिष्टव्यसनेषु श्री अमुकेषु ।

(३२) भृत्यादियोग्य - स्वस्तिश्रीमद्विजानासिरवतंसावतंसित स्ववंशधर्मवध्त्री कुसुमसुवासितास्मदनुकूलकार्यानुकूले श्री अकुकभृत्ये-:

(३३) यवनमुखयादि योग्य-: स्वस्ति श्रीमन्निजवंशचरित हिंदाद्वयप्रतिवर्णनानुष्ठितोत्क...... त्याशवपाभयधर्मश्रेणीलता लवालोधत्प्रलयदुर्गमदुर्गावस्थिति विहारेषु श्री अमुकेषु यथोचितवंकपत्रमिदं

(३४) शकदे शीय लावागुरूंप्रति-: स्वस्ति श्रीमत्क्षितिगताधर्म ध्वंसन श्री भगवत्कृपान्तावताररमणीयतर नवमावतारेच्छा विनिर्मिता बुध्दि बुध्दिमोहनविवादानवसरेच्छाचारविहार संबध्दमायापरिकर द्वन्द्वाचाराचरण प्रतिभातेष्ट देवपद बृन्द द्वादार विन्दा मकरन्दास्वादोन्मादानन्द क्षपितदिष्टाव यवेषु ।

(३५) महाराजानं प्रति-: स्वस्ति श्रीमत्प्रचण्डदोर्दण्ड तीक्ष्ण काण्डखण्डितारालिमण्डलीमुण्डमुदितदिङ्मण्डलेषु प्राच्योदीच्यप्रतीच्यावाच्यसामन्तचक्र चारू चामीकर चुम्बित चूडामणिमरीचिचर्चितचरणेषु ॥

सुतभृत्यसुहृद्वैरि स्वामिसदगुरूदैवते ।<br>
एकैकवृध्दया श्रीकारा लिखेच्च पत्रमूर्द्धनि ॥<br>
षडगुरौ स्वामिने पंच द्वे भृत्ये द्विगुरौ हि ।<br>
श्रीशक्षानां त्रयं मित्रे हयेकैकं पुत्रभार्ययोः ॥

# చోళదేశ వృత్తాంతము

- తీర్థం. శ్రీధరమూర్తి

కరికాలచోళుడు ప్రభుత్వం చేసినది.
పుట్టు పూర్వోత్తరము.

చోళరాజుల కథలు భక్తి విలాసం అనే తమిళగ్రంథంలోను, కొన్ని స్థలమాహాత్మ్యములలోను శోధించి యీ కథలు వ్రాసియున్నవి. కవి. మేలూరి చక్రత్తయ్యంగారు అనే వైష్ణవ బ్రాహ్మణుడు.

ఈ చరిత్రము Mack.Vol-83 (LR.Vol.9) నుండి గ్రహింపబడినది.

కరిక్కాళ చోళడు ప్రభుత్వం చేసినది.
పుట్టుపూర్వోత్తరము.

యితని తల్లి యెనిమిది నెలల గర్భంతో వుండగా పాండ్యదేశాధీశ్వరుల యిన మధురాపురీవారి యుద్ధ సన్నాహ విపత్తుచేత యీ కుంకుమగంధి పునేదేవి అయిన ఆమె గర్భంతోకూడా తప్పించుకొని వెళ్లి వనాంత్రమందు సంచారం చేస్తూ వుండెను. యిట్లు సంచారం చేస్తూ వుండగా ప్రసవకాల సమయమందు ప్రసవవేదనచేత ఆవేదనతోటట్టు పల్లెకూటం చదువ్ చెప్పుకునే జ్యోశ్యులు అనే బ్రాహ్మణ యింటికి వచ్చెను. ఆ బ్రాహ్మణుడు చూచి వోహో యీ శ్రీ ప్రసవవేదనచేత వచ్చివుండినది. అని తెల్సుకొని ఆ బ్రాహ్మణుడు తనయింట్లో స్థలం యిచ్చి సకల వేడుకలు నడిపించెను. ఆ బ్రాహ్మణ యింట్లో ప్రసవించెను. పుత్రుడు గల్గెను గనక ఆ బ్రాహ్మణుడు జ్యోశ్యం చేత యీ పుత్రుని జాతక భావం వ్రాసినంతల్లో యీ పుత్రుడు యేకచ్ఛత్రాధిపతిగా మండలాధిపతిగానున్న ప్రభుత్వం చేసే యోగమున్ను పదియేనుగుల బలంతో వుండేవాడుగ తెలిసెను.

తర్వాత యీ పుత్రునికి జాతకర్మం చేయించెను. కిందట యీ రాజశ్రీ పుత్ర సంతానం కొరకై వఖ దుర్గి అయిన కాళికాదేవిని ప్రార్థన చేస్తూ వుండినందున పుత్రుడు కల్గెను. గనక కాళీచోళడు అని నామకరణం చేసి నా మధేయం పెట్టేరి. యీ బ్రాహ్మడు యీ రాజకుమారుడు

యోగమంతుడని తెల్సుకొని యీ రాజశ్రీనిన్ని యీ శిశువునుంను ప్రభుత్వం చేసేవారు రాజశ్రీలకు యే చొప్పున వొఖ వస్తువులకూ తక్కువ లేక నడిపింతురో ఆ చొప్పున యీ రాజశ్రీకిన్ని శిశువుకున్ను రాజరిక తీవిగానే నడిపిస్తూ ఆ రాజశ్రీయందు మాతృభావనగా యీ బ్రాంహ్మడు నడిపిస్తూ వుండెను. శిశువున్ను దినమొక్క రూపుగా బలవంతుడు పెరుగుతూ వచ్చెను.

